"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"

ஆமோஸ் 4:12.

தேவ எக்காளம்

எனக்கு முன்பாக உள்ளதான எனது மரணத்தைக் கண்ணீரோடு நான் நினைவுகூருகின்றேன். எனது மரணத்தையும், எனது மறுமை வாழ்வின் முடிவற்ற யுகா யுகங்களையும் நான் அடிக்கடிச் சிந்திக்கக்கூடாதபடி சத்துருவாகிய பிசாசு வெகு தந்திரமாக என் மனக்கண்களை இருட்டடிப்புச் செய்துகொண்டேயிருக்கின்றான்.

அவனுக்கு நான் எதிர்த்து நிற்பேனாக. பக்தன் தாமஸ் கெம்பீஸின் கீழ்க்கண்ட வார்த்தைகள் எப்பொழுதும் என் காதில் தொனித்துக்கொண்டேயிருக்கட்டும்:-

("உன்னுடைய அனைத்துச் செயல்களிலும், சிந்தனைகளிலும் இன்று நான் மரிக்கப்போகின்றேன் என்ற கண்ணோட்டத்தில் காரியங்களைச் செய். உன்னுடைய நண்பர்களையும், உனது உடமை

Vol. 13] மார்ச் 1981 [No. 3

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

களையும் நம்பி உன்னுடைய விலையேறப்பெற்ற ஆத்தும இரட்சிப்
பின் காரியத்தைப் பின்னுக்கென்று ஒத்திப்போட்டுவிடாதே.
நினைக்கிறபடியல்ல, உன் நண்பர்களும், உனக்கருமையான
ளும் உன்னை வெகு சீக்கிரத்திலேயே மறந்துவிடுவார்கள்.
வது ஒருவர் மரிப்பதை நீ காண்பாயானால் நீயும்கூட அதே
வில்தான் வெகுசீக்கிரம் பயணப்பட்டுச் செல்லவேண்டுமென்
மறந்துவிடாதே. காலையில் நீ எழும்பியதும், மாலையில் நான் உ
வாழப்போவதில்லை என்ற எண்ணமும், மாலை நேரத்துக்குள் பிரே
சிக்கையில் அடுத்து வரும் விடிபகல் வேளையை நான் காண
டேன் என்ற நினைவும் உன்னைப் பலமாக ஆட்கொள்ளவேண்டு
மரிக்க எப்பொழுதும் ஆயத்தமாயிரு. ஆயத்தமற்ற நிலையில்
இருக்கையில் மரணம் தனது குளிர்ந்த கரத்தை நீட்டி உன்னை
பிடித்துக்கொள்ளாதபடி நீ உன்னை மகா விழிப்புடன் காத்து
கொண்டு எப்பொழுதும் மரணத்துக்கு ஆயத்தமாயிரு. மரண
எந்தநேரம் உன்னைச் சந்தித்தாலும் பயத்தோடும், திகிலோடும்
மட்டற்ற சந்தோஷத்துடன் அதனை வரவேற்கத்தக்க விதத்தி
ஜீவியம்செய். நீ மரிக்கும்போது இயேசு இரட்சகருடன் பரலோக
சதாகாலமும் வாழத்தக்கதாக இப்பொழுதே உலகத்திற்கும் அதின்
ஆசை இச்சைகளுக்கும் சாகக் கற்றுக்கொள். இவ்வுலகிலுள்ள
எந்த ஒரு பொருளையும் பெரிதான விதத்தில் விலைமதிப்பிட்டு
விடாதே. அப்படிச் செய்வாயானால் கிறிஸ்து இரட்சகரண்டை
செல்லுவதற்கு எதுவும் உனக்கு இடையூறாகவிருக்காது. உன்னு
டைய சரீரத்தை ஒடுக்கிப் பரிசுத்தமாக அதனைக் காத்துக்கொள்.

உலகில் நீ ஒருநாள் உயிர்வாழ்வது கூடச் சந்தேகமாயிருக்
கையில் புத்தியற்ற பேதையே, நீண்ட நெடுங்காலம் உயிர்வாழப்
போவதைப் போன்று நீ ஏன் கற்பனை செய்துகொண்டிருக்கின்றாய்?
ஆ என்ன பரிதாபம்! நீ மரித்தபின்னர் யார் உன்னை நினைக்கப்
போகின்றார்கள்? எவராயினும் உனக்காக ஜெபிப்பதில் பயன்
உண்டுமோ?

கடந்துசெல்லும் இவ்வுலகத்தின் மாயையான காரியங்களால்
நீ கவர்ச்சிக்கப்பட இடங்கொடாது உலகிலே நீ ஒரு பரதேசி என்
பதனையும், நிலையற்று அலைந்து திரியும் அரதேசி என்பதையும் திட்
டமாக நினைவில் வைத்துக்கொள். "நிலையான நகரம் நமக்கு
இங்கே இல்லை; வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம்"
(எபி. 13:14) – THOMAS A. KEMPIS)

என்னை அன்புடன் நேசித்தவர்கள், என்னுடன் புசித்துக்
குடித்தவர்கள், என்னோடு ஜீவித்தவர்கள், என்னுடன் பிறந்தோர்,
என்னைப் பெற்றெடுத்தோர், என் உற்றார் உறவினர், எனக்கருமை
யானவர்கள், ஆ எத்தனை, எத்தனையோ பேர் ஒருவர் பின் ஒருவ
ராய் இவ்வுலகத்தை விட்டுக் கடந்து மறைந்து சென்றுவிட்டனர்.
அவர்களின் பெயர்கள் ஒவ்வொன்றையும் நான் நினைவுக்குக்
கொண்டுவந்து தாளிலே எழுதத்தொடங்கினால் எழுதிக்கொண்டே
தானிருக்க வேண்டும்!

(27-ம் பக்கம் பார்க்க)

கர்த்தருக்குள் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

கர்த்தர் தம்முடைய அருமையான பிள்ளைகள் ஒவ்வொருவரையும் தமது நீதியின் பாதையில் வழிநடத்துகிற அன்பின் கன்மலையாகவிருக்கின்றார். சிறிய காரியமானாலும், பெரிய காரியமானாலும் உள்ளத்தின் பாரத்தோடு நேசரின் பொன்முகத்தை நோக்கி அவருடைய வழிநடத்துதலுக்காகக் கெஞ்சும் ஒவ்வொரு தேவப்பிள்ளைக்கும் அவர் ஆலோசனைக் கர்த்தராகவிருந்து அவர்களை அன்புடன் வழிநடத்துகின்றார். அவர்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும் இடதுபுறமாய்ச் சாயும்போதும் வழி இதுவே இதிலே நடவுங்கள் (ஏசாயா 30:21) என்கின்ற தேவ குரலைக் கேட்கக்கூடியவர்களாயிருக்கின்றார்கள்.

“நான் உனக்குப் போதித்து நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன், உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்” (சங். 32:8) என்ற தேவ வாக்கு ஆண்டவருடைய அன்பான மக்களின் கிறிஸ்தவ போராட்ட ஜீவியத்தில் அப்பட்டமாக நிறைவேறுகின்றது. பிரயோஜனமாயிருக்கிறதை அவர் அவர்களுக்குப் போதித்து அவர்கள் நடக்கவேண்டிய வழியிலே அவர்களை நடத்துகின்றார் (ஏசாயா 48:17) ஆலோசனையில் ஆச்சரியமும், செயலில் மகத்துவமுமான பரம தகப்பன் தமது சத்தத்துக்குச் செவிகொடுத்துத் தம்முடைய பரிசுத்த வழிகளில் நடக்க மிகவும் உற்சாகம் கொள்ளும் மக்களை நன்றாய்ப் போதித்து, உணர்த்துகிற தேவனாயிருக்கிறார். நிமிஷந்தோறும் அவர்கள் தேவனுடைய பரிசுத்த பிரசன்னத்தை உணரக்கூடியவர்களாயும் அவரது அமர்ந்த மெல்லிய குரலை டெலிபோனில் கேட்கும் குரலாகக் கேட்டு ஆனந்தப் பரவசமடையும் பாக்கியசாலிகளாகவுமிருக்கின்றனர்.

ஒரு அன்பான பக்தியுள்ள கிறிஸ்தவ வயோதிபத் தாயை நான் அறிவேன். இந்த வயது காலத்திலும் வாய்க்கு ருசியாக மதுரமாகச் சமையல் செய்யக்கூடிய கிருபையைத் தேவன் அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றார்.

“நான் சுவையாகச் சமையல் செய்கின்றேன் என்று எல்லாரும் கூறுகின்றார்கள். ஆனால், உண்மையில் அந்தச் சமையலை என் ஆண்டவரே எனக்காகச் செய்கின்றார். சமையலுக்கான மசாலாக்களை நான் தெரிந்தெடுப்பதிலும், போடக்கூடிய சரியான உப்பின் அளவைக்கூட ஆண்டவர் எனக்குக் கூறுவார். அடுப்பில் நெருப்பு எரிந்து கொண்டிருக்கும். அருகில் அமைதியாக அமர்ந்திருக்கும் என்னுடன் என் ஆத்தும நேசர் சம்பாஷித்துக்கொண்டே

இருப்பார்'', என்று அவர்கள் என்னிடம் கூறினபோது நான் கர்த்தரில் ஆனந்தப் பரவசமுற்றேன்.

"கண்ணுடிப் பாத்திரத்தை அந்த இடத்தில் வைக்காதே, அது உடைந்துபோகும் என்று ஆண்டவர் என் உள்ளத்தில் சொன்ன உடனேயே நான் கீழ்ப்படிந்து அதை எடுத்துவிடவேண்டும். சற்று மெத்தனமாக அதை நான் எடுக்காமல் காலந்தாழ்த்துவேனுனல் என் கண் முன்னரே அது உடைந்து நொறுங்கிப் போய் விடுவதை அநேக முறை நான் கண்ணுரக் கண்டிருக்கின்றேன். இப்படி என் வாழ்க்கையின் ஒவ்வொரு காரியங்களிலும் சிறிதானுலும், பெரிதானுலும் என் அன்பின் ஆண்டவர் என்னை அற்புதமாக வழிநடத்துகின்ருர்'' என்று ஒரு சமயம் ஓர் அன்பான சகோதரி என்னிடம் கூறினுர்கள்.

இவ்விதமான பரிசுத்த அனுபவங்களால் தேவ மக்களின் வாழ்க்கைகள் ஒவ்வொன்றும் நிறைந்து குலுங்குகின்றன. இப்படி அன்புள்ள தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு ஆலோசனைக் கர்த்தராக மாத்திரமல்ல ஜீவப் பாதையிலிருந்து வழிவிலகிச் செல்லக் கூடிய தம்முடைய அருமைப் பிள்ளைகளைத் தாம் விரும்பும் பரிசுத்த பாதையில் கொண்டுவரக் கண்ணும் கருத்துமாகவிருக்கின்ருர். பரிசுத்தத்தின் நிலையிலிருந்து அம்மக்கள் சற்றுத் தாழ்ச்சியுறும் போதும் உடனே அவர்களைச் சிட்சித்துத் தலையில் குட்டி மீண்டும் சரியான பாதையில் அவர்களின் பாதங்களை எடுத்து நிறுத்துகின்ருர்.

ஆவிக்குரிய பரிசுத்த வாழ்வின் பாதையில் நான் குறைவுபட்டுக் காணும் வேளைகளிலெல்லாம் அன்பின் ஆண்டவர் எனக்குக் காண்பிக்கும் திகிலூட்டக்கூடிய சொப்பனம் ஒன்றுண்டு. பள்ளிக் கூடத்தில் நான் மாணவனுக இருப்பதைப்போலவும், முற்றும் ஆயத்தமற்ற நிலையில் நான் ஆண்டுத் தேர்வு எழுத முயற்சிப்பதைப்போலவும், என்னுடன் படிக்கும் மற்ற மாணவர்களெல்லாம் நன்ருகப் படித்து விரைவாகச் சந்தோஷத்துடன் எழுதுகையில் நான்மட்டும் கலக்கமுற்றுக் கையில் வினுத்தாளை வைத்துத் திகைத்துக்கொண்டிருக்கையில் பரீட்சை எழுதக் குறிபிட்ட நேரம் விரைந்து நெருங்கிவிடுவதைக் கண்டு ஆருத் துயரடைந்து படிக்க வேண்டிய நேரத்தில் பாடங்களைப் படிக்காததற்காக நான் மிகவும் சஞ்சலமடைவதாகச் சொப்பனம் கண்டு நடுக்கத்துடன் கண் விழித்து ஆண்டவருடன் காரியங்களைக் கண்ணீருடன் ஒழுங்கு செய்திருக்கின்றேன்.

கடந்த ஆண்டில் ஒருநாள் சற்று அதிகமாக ஒரு சகோதரனுடன் நான் சம்பாஷித்துவிட்டேன். சம்பாஷணைக்குப் பின்னர் என் இருதயம் தேவப்பிரசன்னத்தை இழந்து வெறுமையாகவிருப்பதைக் கண்டு மிகவும் துக்கித்து, அந்த சம்பாஷணையில் கலந்துகொண்ட

தற்காக ஆண்டவரிடம் மன்னிப்புக்காகக் கெஞ்சி மன்றாடி மீண்டும் தம்முடைய தேவப் பிரசன்னத்தை என் உள்ளத்தில் ஊற்றும்படியாக நான் ஜெபித்தேன். அன்று இரவில் ஒருதெளிவான சொப்பனத்தை ஆண்டவர் எனக்குக் காண்பித்தார். அந்தச் சொப்பனத்தில் என்னுடைய கரங்களில் என்னுடைய வேதாகமம் இருப்பதாகவும், பிரசங்கியின் புஸ்தகம் பத்தாம் அதிகாரத்தை நான் திறந்து வைத்திருப்பதாகவும் கண்டேன். அதிகாலை வழக்கமாக நான்கு மணிக்கு ஜெபத்திற்காகக் கண் விழித்தபோது “ஆண்டவரே, இராக்கால சொப்பனத்தில் பிரசங்கியின் புஸ்தகம் பத்தாம் அதிகாரத்தை நீர் எனக்குக் காண்பித்தீரே, தேவரீர் என்னோடு பேச விரும்பியதான தமது வசனத்தை அந்த அதிகாரத்தில் காண்பியும்” என்று கேட்டுக்கொண்டே பிரசங்கியின் புத்தகம் பத்தாம் அதிகாரத்தை நான் திறந்த மாத்திரத்தில் என் கண்கள் 14-ம் வசனத்தில் விழுந்தது. “மூடன் மிகுதியாய்ப் பேசுகிறான்” என்ற அந்த தேவ வார்த்தை என் உள்ளத்தை ஊடுருவிச் சென்றது. “ஐயா, நான் ஒரு மூடன் தான், நேற்றைய தினம் நான் கலந்து கொண்ட சம்பாஷணை தவறு. நான் உமது உள்ளத்தை எனது வீண் வார்த்தைகளால் துக்கப்படுத்திவிட்டேன். தயவாக மன்னியும்” என்று கெஞ்சினேன். உடனே தேவ சந்தோஷம் என் உள்ளத்தை நிரப்பிற்று.

ஆ, அவரின் அன்பின் மாட்சிமைதான் என்ன!

கடந்தவாரம் கோவை சென்றிருந்தேன். கோவையில் குறிப்பாக ஓரிடத்தில் பஸ்ஸிலிருந்து இறங்கவும் அந்த நாளுக்கான ஒரு குறிப்பிட்ட செய்தித்தாளை ஒரு கடைக்குச் சென்று வாங்கவும் மிகவும் திட்டமாக உள்ளத்தில் உணர்த்தப்பட்டேன். கடைக்குச் சென்றபோது அந்தச் செய்தித்தாள் ஒன்றே ஒன்றுமட்டும்தானிருந்தது. அதை வாங்கிப் பார்த்தபோது என் உள்ளம் மிகவும் மகிழ்ச்சியுற்றது. கர்த்தரின் மட்டற்ற அன்பின் வழிநடத்துதலுக்காக அவரை ஸ்தோத்திரித்தேன். நம்மனைவருக்கும் பயனுள்ளதான நாஸ்ட்ரடாமஸ் என்ற ஒரு அறிவியல் விற்பனனைக் குறித்து அதில் எழுதப்பட்டிருந்தது. செய்தியைக் கீழே தருகின்றேன்.

நாஸ்ட்ரடாமஸ் என்ற பிரபல மருத்துவர் 15-ம் நூற்றாண்டில் பிரான்ஸ் தேசத்தில் வாழ்ந்தவராவார். இவர் ஒரு புத்தகம் எழுதியிருக்கின்றாராம். அப்புத்தகம் நாலடிப்பாடல்களாக எழுதப்பட்டிருக்கின்றதாம். தனது காலத்திற்குப் பின்னர் இவ்வுலகத்தில் நிகழக்கூடிய அதிர்ச்சி தரத்தக்க பல பயங்கர நிகழ்ச்சிகளைப்பற்றி அதில் எடுத்துரைத்துள்ளதாகத் தெரிகின்றது. பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் உலகில் நிகழக்கூடிய நிகழ்ச்சிகளைப்பற்றி அவர் தமது புத்தகத்தில் குறிப்பிட்டவைகளில் அநேகம் அப்படியே நடந்து வந்திருக்கின்றதாம்.

குறிப்பாக ஜெர்மன் தேசத்தில் ஹிஸ்டர் என்ற சர்வாதிகாரி (இது ஹிட்லராகத்தானிருக்கமுடியும்) தோன்றுவான், 27 ஆண்டு காலம் சர்வாதிகாரம் செலுத்தும் அவன் யூத மக்களைக் கருவறுப்பான், அவன் கொடுஞ்செயல்கள் பலபுரிந்து இறுதியாகப் பூண்டோடு அழிந்துபோவான் என்பதையெல்லாம் நாஸ்ட்ரடாமஸ் தனது புத்தகத்தில் எழுதியுள்ளாராம்.

1942-ம் ஆண்டு பிரிட்டிஷ் பேரரசு அஸ்தமித்துவிடும் என்றும் அவர் குறிப்பிட்டது அப்படியே நடந்துள்ளது. நெப்போலியனின் பிறப்புத் தேதியும், அவன் 14 ஆண்டுகள் ஆட்சி செய்வான் என்று குறுப்பிட்டதுவும் உண்மையில் நிகழ்ந்திருக்கின்றது.

இவையெல்லாம் கடந்த கால நிகழ்ச்சிகள். ஆனால், நமது காலத்தில் போப் ஜான்பால் தேர்தலுக்கு ஒரு மாதத்திற்குப்பின் மரணமடைவதையும்கூட நாஸ்ட்ரடாமஸ் தன்னுடைய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளாராம். அதுவும் அப்படியே நடந்துள்ளது.

இப்படி இன்னும் அநேக காரியங்கள் அவர் தமது புத்தகத்தில் எழுதியுள்ளபடியே நடந்திருப்பது பிரெஞ்சு மக்களுக்கும், உலகினருக்கும் பெரும் வியப்பை அளித்திருக்கின்றது. இந்தப் புத்தகம் பிரெஞ்சு மொழியில் மாத்திரம் இதுவரை 100 பதிப்புகள் (EDITIONS) வெளிவந்துவிட்டனவாம்.

அப்புத்தகத்தில் பூமி பிளந்து துண்டு துண்டாக வானத்தில் தொங்கும் என்றும் கூறப்பட்டிருக்கின்றதாம். பயங்கரமான அணு குண்டுகள், ஹைட்ரஜன் குண்டுகள் போன்றவற்றால் உலகினுக்கு ஏற்படக்கூடிய மா பயங்கர அழிவுகளை இது குறிக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

நாஸ்ட்ரடாமஸின் கணக்கின்படி இனி வெகு சீக்கிரத்தில் ஒரு பெரிய பிரபஞ்ச அழிவு ஏற்படும் என்றும், வானத்தில் தோன்றும் ஹெய்லி என்ற வால் நட்சத்திரத்தின் தோற்றத்தையொட்டிப் பெரிய அழிவுகள் இவ்வுலகத்தைச் சந்திக்கும் என்றும் கூறப்பட்டுள்ளதாம். கடைசி நாட்களில் மரித்தவர்கள் கல்லறைகளிலிருந்து எழும்புவார்கள் என்பது போன்ற விஷயங்களையெல்லாம் அவர் தமது புத்தகத்தில் எழுதியிருக்கின்றாராம். இவையெல்லாம் நமக்குப் பெரிய ஆச்சரியத்தை அளிக்கின்றதல்லவா? “ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்” (1 தெச. 4:16) என்ற தேவ வார்த்தையை நமக்கு நினைப்பூட்டுகின்றது.

பிரெஞ்சு நாட்டு மக்களால் பெருந்தீர்க்கதரிசி என்றழைக்கப்படும் நாஸ்ட்ரடாமஸின் எழுத்துக்கள் அனைத்தும் வருங்காலங்

களில் வந்து நிறைவேறினாலும், நிறைவேறாவிட்டாலும் ஒன்றுமட்டும் நூற்றுக்கு நூறு நிச்சயம். அதனை உலகின் அனைத்து ஞானிகளும், அரசியல் தலைவர்களும், சற்று ஆழமாகச் சிந்திக்கும் அறிவாற்றலுடையோர் அனைவரும் வேதனையோடு ஒத்துக்கொள்ளுகின்றார்கள். அதாவது வெகு சீக்கிரம் இந்த உலகத்திற்கு ஒரு பேரழிவு உண்டாகப்போகின்றது என்று.

முன்னாளைய அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் தனது இறுதி பிரிவுபசார 15 நிமிடநேர உரையில் அமெரிக்க மக்களுக்கு டெலிவிஷனில் விடுத்த சோகம் நிறைந்த எச்சரிப்பின் வார்த்தைகள் இதுதான்:- எந்த வினாடியிலும் ஒரு அணு ஆயுதப்போர் நிகழ்ந்துவிடக்கூடிய இக்கட்டான நிலையில் உலகம் இன்று சென்றுகொண்டிருக்கின்றது. இனி நேரிடக்கூடிய யுத்தத்தின் விளைவுகள் இரண்டாம் உலக மகாயுத்தத்தைக்காட்டிலும் கற்பனைசெய்து பார்க்கமுடியாத அளவுக்குக் கொடுமையானதாகவிருக்கும். ஒருசிறியபதட்டநிலை அல்லது பேராசை அல்லது தவறான கணிப்பு அல்லது முட்டாள்தனம் நிகழ்ந்துவிடுமானால் அணு ஆயுதசக்திகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுவிடும். அவ்வளவுதான் மனிதவர்க்கமும், அழகிய உலகமும் பூமியின் முகத்திலிருந்தே துடைக்கப்பட்டுப் போய்விடும்.

6-1-1981 தேதியிட்ட ஐக்கிய நாட்டு ஸ்தாபனக் கணக்கின்படி இன்று உலகில் 40,000 முதல் 50,000 அணுதண்டுகள் வல்லரசு நாடுகளிடம் இருப்பதாகத் தெரிகின்றது. இவைகள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து வெடிக்கச்செய்யும் பட்சத்தில் இவற்றின் கொடிய அழிவாற்றல் ஹிரோஷிமாவில் வீசப்பட்ட அணுகுண்டைப்போல 10 லட்சம் அணுதண்டுகளின் அழிவுத்திறனுக்குச் சமமாகும் என்று தெரிகின்றது. இந்த அணுகுண்டுகள் அனைத்திலும் உபயோகிக்கப்பட்டுள்ளதான TNT என்ற நாசகாரி வெடி மருந்தின் கொள்ளளவு 1300 கோடி டன்களாகும். இதன்படி பூமியிலுள்ள ஒவ்வொரு ஆண், பெண், குழந்தைக்கும் தலா 3 டன்களுக்கும் அதிக எடை TNT வெடிமருந்து தலைக்குமேல் காத்துக்கொண்டிருக்கின்றது.

இது இப்படியிருக்கத்தக்க உலக நாடுகள் தற்சமயம் ஆண்டொன்றுக்கு 50,000 கோடி டாலர்கள் ராணுவங்களுக்குத் தேவையான ஆயுதங்களுக்குச் செலவிட்டுவருகின்றன. அதாவது ஒரு நிமிட நேரத்தில் 80 லட்சம் ரூபாய்கள் ராணுவத்திற்கென்று செலவிடப்படுகின்றது.

உலகம் எக்காலத்திலும் கண்டிராத அளவில் இன்று அழிவின் விழிம்பிற்கு நெருங்கி வந்து சேர்ந்திருக்கின்றது. மனித சமூகமே பூமியின் முகத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுவிடும் நிர்ணயமான எல்கைக் கோட்டுக்கு வந்துவிட்டது.

இன்று உலகிலுள்ள ஒவ்வொரு சிறிய நாடும்கூட அணுகுண்டு தயாரிப்பதில் தீவிரமாக முனைந்து செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. பாக்கிஸ்தான், ஈரான், எகிப்து போன்ற நாடுகள் எல்லாம் அணுகுண்டு தயாரிக்கத் தொடங்கிவிட்டன. சிறிய நாடான இஸ்ரவேலிடம் தற்சமயம் 10 அணுகுண்டுகள் இருப்பதாக CHRISTIAN SCIENCE MONITOR என்ற பத்திரிக்கை கூறுகின்றது. உலகத்திற்கு அடுத்த வினாடியில் நேரிடக்கூடியது என்ன என்பது மர்மமாகவிருக்கின்றது.

அநேகமாக மூன்றும் உலக மகா யுத்தம் இந்த ஆண்டிலேயே நடந்தாலும் நடக்கலாம் என்று ஆஸ்திரேலிய பிரதமர் உட்பட சில உலகத் தலைவர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றனர். ஆப்கானிஸ்தானத்தை விழுங்கியுள்ள ரஷ்யா போலந்து நாட்டு விவகாரத்தில் மிகவும் தீவிரமாகத் தனது படைகளை அனுப்பி நடவடிக்கைகளில் இறங்கும் பட்சத்தில் உலகப்போர் மூளுவது தவிர்க்கமுடியாததாகிவிடும் என்பது உறுதியாகிவிட்டது.

“உலக மகா யுத்தம் ஒன்று ஆரம்பிக்கும் பட்சத்தில் 18 மணி நேரத்தில் 15 கோடிப்பேர் சாவார்கள்” என்று காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதி கென்னடி பல ஆண்டுகளுக்கு முன்னர் கூறினார். ஆனால் இன்று காலம் மாறிவிட்டது. நாட்டுக்கு நாடு கண்டம் விட்டுக் கண்டம் பாயக்கூடிய ஏவுகணைகள் செல்ல எடுக்கும் ஓரிருமணி நேரக்காலக் கெடுதான், நாடுகளும் நகரங்களும் புகைந்து புகைக்காடாகிப் போய்விடும். பிரான்சு தேசம் கண்டம் விட்டுக் கண்டம் பாயக்கூடிய 60 அணு ஆயுத ஏவுகணைகளை ரஷ்யாவிலுள்ள 60 நகரங்களை நோக்கித் தயார் நிலையில் வைத்திருக்கின்றதாம். இப்படி வல்லரசுகள் ஒவ்வொன்றும் ஒன்றையொன்று அழிக்கவேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் செய்துமுடித்து ஆயத்த நிலையிலிருக்கின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக உலகம் முழுவதிலும் ஒழுக்கநிலை மகா பயங்கரமாகச் சீர்கேடடைந்துவிட்டது கிரிமினல் குற்றங்கள், கொலைகள், கொள்ளைகள், கலவரங்கள், மிருகத்தனமான கற்பழிப்புகளால் உலகம் நிறைந்துவிட்டது. கடந்தவாரத்தில் தினசரிப் பத்திரிக்கை ஒன்றில் ஒரு துயரமான சம்பவம் இடம் பெற்றிருந்தது. 29 வயதிய மிருகத்தனமான ஒரு மனிதனின் காமவெறிச் செயலால் 13 வயதினளான பெண் பிள்ளை ஒருத்தி மாண்டுபோனாள் என்று. அடுத்து ஒரு செய்தி இவ்வாறுள்ளது. டில்லியில், தெருவிலுள்ள தண்ணீர்க் குழாய்க்குத் தண்ணீர் பிடித்து வரச்சென்ற

டாக்டர் ஒருவரின் 11 வயது மகள் பூனம் என்பவள் திரும்பிவரவே இல்லை. இரண்டுமூன்று நாட்களுக்குப்பின்னர் அவள் சடலம்கிடைத்தது. கற்பழித்து அவள் கொல்லப்பட்டிருந்தது தெரியவந்தது.

இன்று இவ்விதமான கொடுந் தீச்செயல்கள் எல்லாம் சர்வ சாதாரணமாக நடக்கின்றன. தேவ கோபாக்கினை வானத்திலிருந்து வருஷிக்கப்படுமுன்னர் இவையெல்லாம் வந்து சம்பவிக்க வேண்டியது இயல்புதான்.

உலகம் இன்று அதின் போக்கில் சென்றுகொண்டிருக்கின்றது, என்று நாம் எண்ணுகின்றோம். தேவையான பொருட்களைச் சற்று அதிகமாயினும் விலை கொடுத்துக் கடைகளிலிருந்து பெற்றுக்கொள்ளுகின்றோம். போக்குவரத்துகள் வழக்கம்போல நடக்கின்றன. உலகில் மாறுதலைக் காணவில்லை. மக்கள் பணங்களைத் தேடுவதிலும், புகழ் ஈட்டுவதிலும் முழு நாட்டம் செலுத்திக்கொண்டிருக்கின்றனர். உண்பதுவும், உடுப்பதுவும், உல்லாசமாக ஜீவிப்பதுவும், உலகத்தை முழு மூச்சுடன் அனுபவிப்பதுவுமே உலக மக்களின் குறிக்கோளாகவிருக்கின்றது. இதே குறிக்கோளையே பெரும் எண்ணிக்கையான பெயர்க் கிறிஸ்தவர்களும் தங்கள் வாழ்வின் இலக்காகக் கொண்டுள்ளார்கள். ஜெபம், உபவாசம், வேத வாசிப்பு, பரிசுத்த ஜீவியம் போன்றவைகளெல்லாம் இம்மக்களுக்கு நூதனமாகத் தெரிகின்றன. நியாயத்தீர்ப்பு, மோட்சம், நரகம், முடிவில்லா நித்தியம் இவைகளிலெல்லாம் இம்மக்களுக்குச் சற்றும் நம்பிக்கையே கிடையாது. உலகத்தை அனுபவிப்பதிலும், அதின் இன்பங்களை அனுபவியாதிருத்தலிலுமே மோட்சம், நரகம் இந்த உலகத்திலேயே அடங்கியிருக்கின்றது என்று இவர்கள் எண்ணுகின்றனர். உலகத்தின் ஆசா பாசங்களிலும், அதின் சிற்றின்பங்களிலும் மூழ்கித் திளைத்துக்கொண்டிருக்கும் இம்மக்களுக்குக் கர்த்தருடைய பரிசுத்த வழிகளில் ஜீவிக்கின்ற தேவமக்கள் அருவருப்பானவர்களாகத் தெரிகின்றார்கள்.

ஆனால் அந்தோ! நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். ஒரு க்ஷணப்பொழுதில் உலகில் பலத்த மாறுதல்கள் உண்டாகிவிடும். ஏற்றுமதி, இறக்குமதி கட்டோடு ஒழிந்துபோம். சர்வதேசப் போக்குவரத்துகள் ஸ்தம்பித்துவிடும். விளைபொருட்கள் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும். உலகத்தை கொடிய உபத்திரவ காலம் சூழும். அதற்கு முன்பதாக அன்பின் நேசர் தம்முடைய பரிசுத்த மக்களைத் தம்மண்டை சேர்த்துக்கொண்டுவிடுவார். அல்லேலூயா.

ஒரு கர்த்தருடைய பிள்ளையின் சமீபத்திய அனுபவத்தைக் கேட்போம்:-

நானும், என் கணவரும் அன்றைய இரவை முழுவதுமாக ஜெபத்திலும், வேதவாசிப்பிலும் செலவிடுவதென்று தீர்மானித்

தோம். நள்ளிரவு நேரம் நான் தனித்து ஜெபித்துக் கொண்டிருக்கையில் ஒரு பிரத்தியட்சமான தரிசனம் கண்டேன். அதில் தரையில் முக்காடிட்டு ஜெபித்துக் கொண்டிருந்ததான ஒரு பெண்ணை நான் கண்டேன். அப்பெண்ணையே நான் பார்த்துக் கொண்டிருந்தான வேளையில் ஒரு பெருஞ்சத்தம் வானத்திலிருந்து "ஆண்டவரின் இரண்டாம் வருகை" என்று உண்டாயிற்று அந்தக் குரலைக் கேட்டதும் என் சரீரம் புல்லரித்துவிட்டது. நான் நடுக்கமுற்றேன். சற்றுநேரத்தில் காட்சி மறைந்தது. என்னுடைய வேதாகமத்தை நான் திறந்து வாசிக்கத் தொடங்கியபோது அந்த நேரப் பகுதியாக செப்பனியாவின் புத்தகம் முதலாம் அதிகாரம் எனக்குக் கிடைத்தது. அதில் 14-ம், 15-ம், 16-ம் வசனங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன:—

"கர்த்தருடைய பெரிய நாள் சமீபித்திருக்கிறது; அது கிட்டிச் சேர்ந்து மிகவும் தீவிரித்து வருகிறது; கர்த்தருடைய நாளென்கிற சத்தத்துக்குப் பராக்கிரமசாலி முதலாய் அங்கே மனங்கசந்து அலறுவான்.

அந்த நாள் உக்கிரத்தின் நாள்; அது இக்கட்டும், இடுக்கமுமான நாள்; அது அழிவும் பாழ்கடிப்புமான நாள்; அது இருளும், அந்தகாரமுமான நாள்; அது மப்பும், மந்தாரமுமான நாள்.

அது அரணிப்பான நகரங்களுக்கும், உயரமான கொத்தளங்களுக்கும் விரோதமாக எக்காளம் ஊதுகிறதும் ஆர்ப்பரிக்கிறதுமான நாள்".

இந்த வசனங்களை நான் வாசிக்கையில் தரிசனத்தில் நான் கேட்ட தேவகுரலும் ஆண்டவருடைய வசனங்களும் மிகவும் ஒத்திருப்பதைக் கண்டு பெரிதும் ஆச்சரியமும், திகைப்புமுற்றேன். மெய்யாகவே ஆண்டவர் சீக்கிரமாக வரப்போகின்றார். அவர் தாமதிக்கமாட்டார். எவ்வித சந்தேகமுமே இல்லை.

இதை வாசிக்கின்ற அன்பார்ந்த தேவப்பிள்ளையே, மனுக்குலத்தின் பாவத்திற்காக மூன்றாணிகளில் தொங்கிய தேவ குமாரனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெகு சீக்கிரமாக வரப்போகின்றார். அவருடைய வருகை அவரை நேசிக்கின்ற, அவரது பரிசுத்த இரத்தத்தால் பாவங்களறக் கழுவி சுத்திகரிக்கப்பட்ட, அவருடைய பரிசுத்த வழிகளில் ஜீவிக்கின்ற அவரது அன்பின் மக்களுக்குக் களிகூருதலின் ஆனந்த பாக்கிய நாள். தேவன்தாமே அவர்கள் இகத்தின் கண்ணீர் யாவையும் துடைத்துத் தாம் வாழுகின்ற இன்பப் பரதீசில் தம்முடன் முடிவற்ற யுகா யுகங்களாக அவர்களை வைத்துக்கொள்ள வானத்திலிருந்து இறங்கிவரும் இன்பநாள். அந்த மனமகிழ்வின் பேரானந்த நன்னாளின் பாக்கியத்திற்கு நீயுங்கூடப் பங்காளியாகித்தீர பரம தகப்பன் இரக்கம் செய்வாராக. ஆமென்.

கர்த்தராகிய இயேசுவே வாரும்.

ஆழ்கடல் அட்லாண்டிக்கில் நிகழ்ந்த ஓர் அற்புதம்.

(அவன் ஒரு இளம் வாலிபன். நல்ல ஊதியம் கிடைக்கக் கூடிய கடற்கப்பல் ஒன்றிலே அவன் வேலே பார்த்தான். கப்பல் வாழ்க்கை சுதந்திர வானம்பாடிப் பறவையான அவன் விரும்பிய அனைத்தையும் அள்ளி, அள்ளிக் கொடுத்தது. பாவத்தில் ஜீவித்துக் கொண்டிருந்த அவனுக்குத் தேவன், மோட்சம், நரகம், பாவம், நித்தியம், நியாயத்தீர்ப்பு, பரிசுத்தம் முதலானவைகள் தேவை யற்ற விளையாட்டுப் பொம்மைகளாயிருந்தன. ஆனாலும், தேவன் தனக்கு எத்தனை அவசியமானவர் என்பதைக் கண்ணீரோடு கண்டு ணர்ந்து கதறிக் கூக்குரலிடும் ஒரு வேளை அவன் வாழ்வில் உண் டாயிற்று. கர்த்தரும் கிருபையாக அவனுக்கு இரங்கினார். இரட்டை மரணங்களினின்று அவனை அற்புதமாக விடுவித்தார். அவ்வாலிப னின் வாழ்வில் நடந்த அற்புத நிகழ்ச்சி என்ன? ஜெபத்துடன் தொடர்ந்து வாசியுங்கள்.) (பத்.)

டோனி மேடிசன் கர்த்தரின் சேவையில் ஒரு பயனுமற்ற ஓர் வாலிபனுவான். ரிப்ளி காஸ்ட்டல் என்ற கப்பலில் இங்கிலாந்துக் கும் மேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரைப் பகுதிகளுக்கும், வேளா வேளைகளில் வடக்கு அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைத் தாண்டி நியூயார்க் பட்டணத்திற்கும் அடிக்கடி அவன் பயணம் செய்து கொண்டிருந்தான். ரிப்ளி காஸ்ட்டல் என்ற இந்த வியாபாரக் கப் பலில்தான் டோனி பணி ஆற்றிக்கொண்டிருந்தான். நியூயார்க் பட்டணத்தில்தான் அவன் பிறந்தான். திரளான தண்ணீர்களில் தங்கள் நாட்டுக் கொடி பறக்கும் கப்பல்களில் தனது வயதுடைய வாலிபர் பணியாற்றும் பணியைச் செய்து கொண்டிருந்த அவன் அம்மக்கள் கொண்டிருந்த மனதையே அவனும் கொண்டிருந்தான்.

கப்பல் நிற்கும் துறைமுகங்களான போர்ட் செயிட், ஏடன், கொழும்பு, லாகோஸ் போன்ற அநேக இடங்களில் அவன் குடித்து வெறித்துக் களிகூர்ந்தான்.

கப்பலின் பிரதான அதிகாரிதான் முதன் முதலாக டோனி யைத் தேவனின் பக்கமாகத் திருப்பிவிட முயற்சித்தார். அவனு டைய விலேயேறப்பெற்ற ஆத்துமா, அண்ட சராசரங்களைப் படைத்த தேவன், கிறிஸ்து இரட்சகர், இரட்சண்யம் போன்ற காரியங்களைக் குறித்து அவர் அவனிடம் பேசினார். தனக்கு ஒரு ஆத்துமா உண்டா என்று அவன் தனக்குள்ளேயோ அல்லது எவரிடமோ, எக்காலத்தும் வினவியதே இல்லை. தனது வாழ்க்கையில் தேவ னுக்கு ஓர் அன்பின் அக்கரை உண்டு என்று அவன் தன் சிந்த னைச் சுழலில் என்றும் எண்ணியதே கிடையாது. ஆனால், அவன்

அந்தப் பிரதான அதிகாரியை மிகவும் கனப்படுத்தினன். டோனி இந்த அதிகாரியினிடத்தில் விவரிக்க முடியாத ஒரு தனிப் பண்பையும், ஓர் மாபெரும் வித்தியாசத்தையும் கண்டிருந்தான். அந்த அதிகாரி எல்லாரையும்விடத் தனித்திருந்தார் என்பது இதின் பொருளல்ல. உண்மையில், கப்பலிலுள்ள எல்லா அதிகாரிகளிலும் மிகவும் எளிதாகப் பழகவும், நெருங்கி உறவாடவும், ஏற்ற இனிய சுபாவம் அவரிடமிருந்தது. டோனி இவ்வதிகாரியினிடம் ஒரு பலத்த மாற்றத்தைக் கண்டு, அதைக் குறித்து அவன் மிகவும் விழிப்புணர்வோடிருந்தான்.

ரிப்ளி காஸ்ட்டல் என்ற அவனது கப்பல் மேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரைக்கு அப்பால் அந்தக் குறிப்பிட்ட நாளில் சென்றுகொண்டிருந்தது. கப்பலின் யந்திர அறையில் அந்த இராக்காலத்தில் அவன் நின்றுகொண்டிருந்தான். பிரதான அதிகாரி தன்னிடம் பேசிக்கொண்ட காரியங்கள் அனைத்தையும் தன் மனதில் சிந்தித்தான். அது அவனுக்கு வெறுமையாய்த் தெரிந்தது. அவர் பேசின பரம காரியங்கள் டோனியின் உள்ளத்தில் எவ்வித மாற்றத்தையும் அளிக்கவில்லை. விசுவாசமும், ஜெபமும் தெளிவற்ற காரியங்களாக அவனுக்குத் தெரிந்தன. அவைகள் பயனுள்ளவைகளாய்த் தோன்றவில்லை. அவற்றின் தேவையும் அவனுக்கு அவசியமற்றதாயிருந்தது. போர்ட் செயிட் துறைமுகத்தையும், மால்ட்டா, ஜிப்ரால்டர் போன்ற இடங்களின் இனிய மதுவையும், அவை அளிக்கும் அநேக இன்பங்களையும் அவன் தனக்குள் சிந்தித்தான். ஆனால், அந்த இன்ப சுகங்கள் அனைத்தும் மிக விரைவில் அவனை நிர்ப்பந்தனுக்கி அவனைத் தனித்தும், வெறுமையாகவும் விட்டு விட்டுச் சென்ற நிலைகளையும் நினைவுகூர்ந்தான்.

டோனி நின்றுகொண்டிருந்த கப்பலின் அடியிலிருந்த யந்திர அறை அன்று மிகவும் உஷ்ணமாகவிருந்ததுடன் அவன் நாவும் தாகத்தால் வறண்டிருந்தது தனது மூச்சு திணறுவதாகவும், தாகத்திற்குக் குடிப்பதற்கு ஏதோ ஒரு பானம் தனக்குத் தேவை என்றும் அவன் அதிகமாக உணர்ந்தான். யந்திர அறையில் நிறுத்தியிருந்த ஏணிப்படிகளில் தள்ளாடிக்கொண்டே ஏறி மேலறைக்கு வந்த அவனுக்குக் குடிக்கத் தண்ணீர் அங்கு இருந்தது. தண்ணீரைக் குடித்துத் தாகத்தைத் தீர்த்த அவன் இதமான கடற்காற்றைச் சுவாசிக்கக் கப்பலின் மேல் தளத்திற்கு வந்தான். எங்கும் இருளடர்ந்து கிடந்தது

என்றைக்குமில்லாத விந்தையாக அன்று அட்லாண்டிக் சமுத்திரம் அலைகளின்றி அமைதியாகக் கிடந்தது. மிகவும் ஆழமான அச் சமுத்திரத்தில் அவ்வப்போது எழுந்த சிற்றலைகள் கப்பலைத் தெம்மாங்குப் பாடித் தாலாட்டுவதைப் போன்றிருந்தது. ஆள் அரவமற்றக் கப்பலின் மேல் தட்டில் டோனியைத் தவிர எவருமில்லை. கப்ப

யின் மேல் தட்டிலுள்ள தடுப்பு வேலிக்கம்பியைப் பிடித்துக்கொண்டு கடற்காற்றை இன்பமாகச் சுவாசித்துக்கொண்டு அமைதியாக அந்த இராக்காலத்தில் அவன் அமர்ந்திருந்தான். இப்படித்தான் அந்தக் குறிப்பிட்ட இடத்தில் அவன் வழக்கமாக உட்கார்ந்திருப்பான். சமுத்திரத்தைக் கிழித்துக்கொண்டு விரைந்து முன்னேறிக்கொண்டிருந்த கப்பலின் பிரகாசமான விளக்குகளின் ஒளியில் சமுத்திரத்தின் வியாபித்த நீர்ப்பரப்பு பளபளத்து மின்னிக்கொண்டிருந்தது.

திடீரென, எல்லாம் சுழன்று, சுழன்று செல்வதான ஓர் உணர்வு அவனுக்குத் தட்டுப்பட்டது. ஆம், கப்பலிலிருந்து கடலுக்குள் தான் விழுந்துகொண்டிருப்பதான சுயநினைவு அவனுக்குள் வந்தது அவன் மிகவும் அதிசயிக்கத்தக்கதான நிலையில் பூமத்திய ரேகைக் கோட்டுக்கு அருகாமையிலுள்ள வெப்பமாயிருக்கக்கூடிய அச்சமுத்திரத்தில் தலைகீழாக விழுந்தான். டோனி சமுத்திரத்தின் மேற்பரப்பில் விழவும் அவன் இதுவரைப் பயணம் செய்து வந்த 14000 டன்கள் எடையுள்ள ரிப்ளி காஸ்ட்டல் என்ற அவனது கப்பல் நெடுந்தொலைவு சென்றுவிட்டது. டோனி பெருஞ்சத்தமிட்டுக் கூக்குரலிட்டுக் கதறினன். அவனது கதறலினல் யாதொரு பயனுமில்லை. ஒருவாறு தனது மூச்சை அடக்கிக்கொண்டு நீர் மட்டத்திற்குமேல் நீந்தினன். கப்பலின் பயணத்தைக் கண்காணிக்கும் சிப்பந்திகளும், பிரயாணிகள் அனைவரும் ஆழ்ந்த உறக்க நிலையிலிருந்தனர். ஒருக்கால் கப்பலைப் பாதுகாக்கும் முன்னணியத்திலிருந்த கப்பல் அதிகாரி ஏதோ ஒரு பொருள் தண்ணீரில் விழுந்ததை அறிந்திருக்கலாம்.

சடுதியாகத் தன்னிடம் விழுந்த டோனியை அட்லாண்டிக் மகா சமுத்திரம் ஏற்றுக்கொண்டபோதிலும் டோனியின் உள்ளம் பெருங்கவலையில் மூழ்கிற்று. இச்சமுத்திரத்தில் அவன் அடிக்கடிக் கப்பற்பயணம் செய்திருக்கின்ருன். இச்சமுத்திரத்திலுள்ள பெரிய, பெரிய சுருமீன்கள் இவனது கப்பலைச் சுற்றி விளையாடுவதையும், சமுத்திர ஆழங்களிலிருந்து திடீர், திடீரென்று நீரின் மேற்பரப்பிற்கு அவைகள் வந்து தங்கள் வெண்மையான வயிற்றையும், பட்டயம் போன்ற நீண்ட கூர்மையான பற்களையும் காண்பித்துவிட்டு நீரினுள் செல்லுவதையும் அவன் கண்டு பயமும், குதூகலமும் அடைந்திருக்கின்ருன்.

டோனி குளிரால் நடுங்கினன். அவனுடைய கடந்தகால வாழ்க்கை முழுவதும் அவனது கண்களுக்கு முன்பாகக் கடந்து சென்றுகொண்டிருந்தது. நியூயார்க் பட்டணத்தையும், கோனித்தீவையும் அவன் மனக்கண்கள் கண்டன. ஆம், இவ்விடங்களில் தான் அவனது சிறுபிராயம் சந்தோஷமாகக் களிந்தது. களிப்பு நிறைந்த கடந்த காலங்கள் அனைத்தும் சோதோமின் சாம்பலாய்ப்

போய்விட்டது. மிகவும் சமீபமான கடற்கரைக்கும் அவனுக்குமுள்ள தூரம் 300 மைல்களாகும். கொடிய சுருமீன்கள் நிறைந்த சமுத்திரத்தில் தனது ஜீவனை எப்படியாகிலும் பாதுகாத்துக்கொள்ளலாம் என்ற நப்பாசையால் சுமாராக நீந்தும் பழக்கமுடைய அவன் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தான். மட்டற்ற மனக்கிலேசத்தின் வியாகுலத்தில் அவன் தனது தன்னந்தனிமையையும், நிர்ப்பந்த நிலைமையையும் இப்பொழுது நினைவுகூர்ந்தான்.

கப்பலின் மேல் தட்டிலிருந்து கடலினுள் விழுந்தது யுகா, யுகங்களுக்கு முன் நடந்ததுபோல் அவனுக்குத் தெரிந்தது. ஒன்று அல்லது இரண்டு மணி நேரங்களுக்கு முன்புதான் கப்பலின் பிரதான அதிகாரி டோனியின் விலையேறப்பெற்ற ஆத்துமத்தைப்பற்றியும், ஆண்டவர் இயேசுவோடு ஒப்புரவாகிக் கொள்ளுவதின் அவசியத்தையும் மிகத் தெளிவுடன் எடுத்தியம்பியிருந்தார்.

ஒவ்வொரு இமைப்பொழுதும், கூர்மையான பட்டயம் போன்ற பற்களையுடைய சுருமீன் ஏதாவதொன்று தன்னைக் கடித்து அட்லாண்டிக் சமுத்திரத்தின் கெடு பாதாளத்திற்கு இழுத்துச் செல்லப்போகும் நேரத்தை வேதனையோடு எதிர்நோக்கிக் கொண்டிருந்தான். டோனியின் ஆத்தும அங்கலாய்ப்பை எவரே வர்ணித்தல் கூடும்? அவன் தனது இதயத்தின் அடித்தளத்திலிருந்து “ ஆண்டவரே, ஈனப் பாதகன் என்மேல் கருணைகூர்ந்து, ஆள் அரவமற்ற ஆழ்கடலில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஏழைக்கு இரக்கம் காட்டும் ” என்று கூக்குரலிட்டான்.

இந்த அனுபவ சாட்சியின் சரித்திரத்தை வாசிக்கும் அநேகர் இதனை நம்ப மறுப்பார்கள். பரிகாசக்காரர்கள் இவ்வுலகில் எப்பொழுதும் இருக்கத்தான் செய்கின்றனர். டோனி மேடிசனும் நீண்டகாலம் ஆண்டவரைப் பரிகாசம் செய்யக்கூடாமற்போயிற்று. டோனி எழுப்பிய ஆத்தும அங்கலாய்ப்பின் விசுவாச அபயக்குரல் தேவனண்டை சென்றது. இதைத் தொடர்ந்து ஒரு ஆச்சரியமான மாறுதல் அவனில் உண்டாயிற்று. சமாதானத்தின் உணர்வும், பாதுகாக்கப்படுவோம் என்ற நம்பிக்கையும் அவன் உள்ளத்தில் பிரவேசித்தது. அவனை இதுவரை ஆட்கொண்டிருந்த திகில் விலகி அமைதி நிலவிற்று. தேவன் தன்னை எவ்வாறு பாதுகாக்கப் போகின்றார் என்பதை டோனி அறியாதிருந்தான்.

ரிப்ளி காஸ்ட்டல் என்ற அக்கப்பல் இப்பொழுது பல மைல்கள் தொலைவில் இருளில் சென்று அதின் வெளிச்சம் மட்டும் சற்று தெரிந்தது. இவ்வேளையில் கப்பலிலிருந்த சிப்பந்தி ஒருவன் பிரதான அதிகாரியிடம் வந்து “ ஒரு நபரைக் காணவில்லை. அநேகமாகக் கப்பலிலிருந்து கடலில் விழுந்திருக்கலாம் என்று நான் அஞ்சுகின்றேன் ” என்றான் அவன்.

"அந்த ஆள் யார்?" என்று அதிகாரி கேட்டார்.
"மேடிசன்" என்பவர் ஐயா.
"டோனியா?"
"ஆம் ஐயா"
"கடைசியாக, நீ அவனை எப்பொழுது கண்டாய்?"
"ஒரு மணி நேரத்திற்கு முன்பு"
"நல்லது. எல்லாரும் உஷார் நிலையில் நில்லுங்கள்"

டோனி மறைந்துவிட்டான். ஒரு சிலமணி நேரங்களுக்கு முன்னர் அவனது விலையேறப்பெற்ற ஆத்துமாவைக் குறித்து அவனிடம் சம்பாஷித்த சந்தர்ப்பத்தை அவ்வதிகாரி நினைவுகூர்ந்தார். இரவின் அவ்வமைதியான நேரம் தேவ மனிதனாகிய அப்பிரதான அதிகாரி தன் இருதயத்தைத் தேவனுக்கு நேராக மிகவும் பரிதாபத்தோடு உயர்த்தி டோனியை எவ்விதத்திலும் தம்முடைய நாமத்திற்கு மகிமையாகப் பாதுகாத்துத் தரும்படியாகப் பரிவுடன் மன்றுடி ஜெபித்தார்.

இதற்கிடையில் கப்பலின் சுக்கான் பிடிப்பவருக்கு (Helsman) உடனடியான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. கப்பலின் யந்திர அறைமணி அபாய ஒலியை எழுப்பி ஒலித்தது. மனிதர்களைத் தின்னக்கூடிய கடல் புலிகள் என்றழைக்கப்படும் சுருமீன்கள் நிறைந்த சமுத்திரத்தில் இருண்ட அவ்விராக் காலத்தில் ஒருமணி நேரத்திற்குமுன் கப்பலிலிருந்து கடலில் விழுந்த ஓர் மனிதனைத் தேடி அக்கப்பல் பின்நோக்கிச் செல்லத் தொடங்கிற்று. ஆனால், கப்பலின் பிரதான அதிகாரி ஒரு விசுவாச மனிதனுவார். கப்பலைச் சுற்றிலும் கப்பல் பணி ஆட்கள் மிகக் கவனமாகப் பார்த்துக்கொண்டும், சப்தங்களைக் கவனித்துக் கேட்டுக்கொண்டும் நின்று கொண்டிருந்தனர். பிரதான அதிகாரி தன்னுடைய ஆசனத்தில் (Bridge) அமர்ந்து டோனிக்காய் மிகவும் பரிவுடன் மன்றுடி ஜெபித்துக்கொண்டேயிருந்தார். அவனுடைய ஆத்தும மீட்பின் காரணமாக அவனது ஜீவனையும் கூடப் பாதுகாத்துத் தர விண்ணப்பம் பண்ணினார். சமுத்திரத்தில் உள்ள மரண அபாயங்களும், உயிர் மோசங்களும் இவருக்கு நன்கு தெரியும். எனவே, தானியேலுக்காகச் சிங்கங்களின் வாய்களைக் கட்டின அன்பின் கர்த்தர் பசியோடிருக்கும் சுருமீன்களின் வாய்களையும் தமது தூதனை அனுப்பிக் கட்டிப்போடும்படியாக ஜெபித்தார்.

இப்பொழுது டோனியின் நிலை என்ன? தனது பழுவான ஆடைகளின் காரணமாக அவன் சிறிது தூரம்தானும் முன்னேறிச் செல்லக்கூடாதவனுயிருந்தான். எப்படியிருப்பினும் அவன் என்னதான் செய்யக்கூடும்? அவனுக்கு மிகவும் சமீபமான ஆப்பிரிக்கக் கடற்கரைக்கு நீந்திச்செல்ல வேண்டுமானுலும் 300 மைல்கள் அவன் பிரயாணம் செய்தல் வேண்டும்! தான் புதிதாகக் கண்டு

பிடித்துள்ள ஆண்டவர் தாமே தன்னைக் காப்பாற்றினாலன்றித் தனது முடிவு அழிவு மட்டுமே என்பதை டோனி நன்கறிவான். நீந்திச் செல்வதைவிட நீரில் மிதந்து கொண்டே சத்தமிட்டுக் கொண்டு அவனிருந்தான். அவனுடைய சப்தம் தேவனது சிங்காசனத்தில்போய் எட்டிற்று. தேவனின் வல்லமையுள்ள கரம் இந்த ஏழை வாலிபனைச் சூழப் பாதுகாப்பளித்துக் கொண்டிருந்தது. அவனுக்கு மேலாக ஒரு பெரிய கடற்பறவை தனக்குக் கிடைத்த நல்ல ஆகாரத்தைக் கொத்தித் தின்பதற்காய் வட்டமிட்டுச் சிறகடித்துக் கொண்டே இருந்தது. பூமத்திய ரேகைக் கோட்டிற்கு அருகாமையிலுள்ள சமுத்திரங்களில் இவ்விதக் காட்சிகளை நாம் காணலாம். எல்லாவற்றிற்கு மேலாக டோனியை அச்சுறுத்தியது சுருமீன்களைப் பற்றிய எண்ணம்தான். அவைகள் அவனை ஏன் கடித்து இழுத்துச் செல்லவில்லை? அந்தப் பயங்கர சுருமீன்கள் தனக்கு அருகாமையிலேயே வட்டமிட்டுச் சுற்றிக்கொண்டிருப்பதை அவன் நன்கறிந்திருந்தான். எனினும், நீதிமான் செய்யும் ஊக்கமான ஜெபம் மிகவும் வல்லமையுள்ளது என்பதை அவன் அறியாதிருந்தான். அவனுக்காக ஒரு நீதிமான் ஊக்கமாக ஜெபித்துக் கொண்டிருப்பதையும், அவரின் கனிவுள்ள ஜெபமே மனிதரைப் பட்சிக்கும் சுருமீன்களின் வாய்களை அடைத்துள்ளது என்பதை அவன் எப்படி அறிவான்? ஆம். மாமிசக் கண்களுக்குப் புலனாகாத தேவதூதரின் சூழாம் கடல் சுருமீன்களாலும், பெரிய பட்சியாலும் டோனிக்கு எவ்வித உயிர் மோசம் நேரிடாமல் அவனைப் பாதுகாத்து நின்றனர்

அவன் தனது கண்களை மூடினான். ஒரு மட்டுக்கு மிஞ்சிய களைப்பு அவனை மேற்கொண்டது. தான் இதற்குமேல் அதிகமாக நீரின்மேல் போராடுதல் கடினம் என்றுணர்ந்தான். அவன் அணிந்திருந்த ஆடையின் பழு அவனால் தாங்கிக்கொள்ள முடியாததாய்த் தோன்றிற்று. காரியங்களைச் சரியான கண்ணோட்டத்தில் அவனால் இப்பொழுது பார்க்க முடிந்தது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிலுவை மரத்தில் ஏன் மரித்தார் என்பதை அவன் உணர்ந்தான். டோனி மேடிசனுக்காக அவர் மரித்தார். ஒரு தேவன் உண்டு. அவர் தன்னை நேசிக்கிறார் என்பதைக் கண்டுகொண்டான். தேவனின் ஜீவனுள்ள பிரசன்னம் தன்னுடன் இருந்தபடியால் தனது ஆத்துமாவில் ஒரு பெரிய சமாதானமும், மகிழ்ச்சியும் வெள்ளப் பெருக்காய் ஓடிற்று என்று டோனி பின்னர் குறிப்பிட்டான். தனது மங்கலான பார்வையில் தூரத்தில் வெளிச்சங்களை அவன் கண்டான். நித்திய இளைப்பாறுதலில் பிரவேசிக்கப்போகும் தான் மோட்சக் கரையின் விளக்கொளிகளைக் காண்பதாக முதலில் அவன் எண்ணினான். ஆனால், அந்த வெளிச்சங்களின் ஊடாக மனிதக் குரல்களும் கேட்டன. அவன் குழப்பமுற்றான் ஆனால், அவை மனிதக் குரல்கள்தான் என்பதை அவன் திட்டமாய்க் கேட்டான். ஒரு கப்பலின் வெளிச்சங்களாய் அவை அவனுக்குத் தெரிந்தன.

கப்பலிலுள்ளவர்கள் அவனைத் தேடிக்கொண்டு வருகின்றனர். புதிய நம்பிக்கை அவன் உள்ளத்தில் பிரவேசித்தது தனது முழு பெலத்தையும் உபயோகித்துச் சமுத்திரத்தின் தண்ணீர்களிலிருந்து ஒரு சப்தமெழுப்பினான்.

கப்பலிலிருந்த கூர்மையான செவிகள் டோனியின் சப்தத்தைக் கேட்டுக்கொண்டன. தீட்சண்யமான கண்கள் கடலில் மிதக்கும் அவனின் உருவத்தையும் அடையாளம் கண்டுகொண்டன. "அதோ அங்கே இருக்கின்றான்" என்று ஒரு மனிதன் குரல் எழுப்பினான். இதைக் கேட்ட கப்பலின் பிரதான அதிகாரி தனது இருதயத்தை நன்றிப் பெருக்குடன் தேவனுக்கு நேராக உயர்த்திக் கப்பலின் சங்கிலிருந்து (Siren) ஆறுதடவைகள் ஊதல் ஒலிகளை எழுப்பி டோனியின் சப்தத்திற்கு மாறுத்தரம் அளித்தார். கடலில் மூழ்கிக்கொண்டிருந்த டோனி இவ்வொலிகளைக் கேட்டான். இதற்குள்ளாக உயிர்மீட்சிப் படகு அவனுக்கு நேராக விரைந்து சென்றது. மங்கி மறைந்துகொண்டிருந்த கொஞ்ச சுயநினைவின் மத்தியில் தன்னைத் தூக்கி எடுக்கும் பலமுள்ள கரங்களை அவன் கண்டான். இதற்கப்பால் எல்லாம் அவனுக்கு இருட்டடித்துவிட்டது.

டோனிக்கு சுயநினைவு வந்தபோது ஒரு கப்பல் படுக்கையில் தான் படுத்திருப்பதை உணர்ந்தான். சமுத்திரத்தின் மகா ஆழங்களிலிருந்தும், பெரிய பட்சியின் கூரிய அலகிலிருந்தும், கொடிய சுறுமீன்களிடமிருந்தும் தான் கர்த்தரால் அற்புதமாகக் காப்பாற்றப்பட்டதை நினைவுகூர்ந்ததுடன் எல்லாவற்றிற்கு மேலாக நித்திய மரணத்திலிருந்து கர்த்தராகிய இயேசு தன்னை விடுவித்திருந்ததையும் மகிழ்ச்சிப் பெருக்குடன் நினைத்துக் கர்த்தரை ஸ்தோத்தரித்தான்.

மேற்கண்ட அற்புத நிகழ்ச்சி உண்மைச் சம்பவமாகும். மேலே குறிப்பிட்ட ரிப்ளி காஸ்ட்டல் கப்பல் பிரதான அதிகாரி இப்பொழுது ஒரு தளகர்த்தனாயிருப்பதுடன் இன்றும் ஆழ்கடல் கப்பல் ஒன்றிலேயே பணி ஆற்றுகின்றார். கர்த்தராகிய இயேசு இரட்சகரைப்பற்றித் தான் சந்திக்கும் ஒவ்வொருவரிடமும் பேசிக்கொண்டும், சாட்சி கொடுத்தும் அவர் வருகின்றார். அவரைப்போன்றே தன்னை இரட்டை மரணங்களிலிருந்து விடுவித்த தன் அருமை இயேசுவுக்காய் டோனி மேடிசனும் சாட்சி கூறித் தேவ அன்பை மக்களுக்கு இன்றுவரைப் பிரசங்கித்து வருகின்றார்.

Courtesy:- "The Evangelist"

———

என் அன்பே, இவை யாவற்றின் பின்னணியத்திலும் உமது எல்லையற்ற அன்பினை நான் காண்கின்றேன்!

"அங்கே குருவிகள் கூடுகட்டும்; தேவதாரு விருட்சங்கள் கொக்குகளின் குடியிருப்பு" (சங். 104:17)

"அவைகளின் ஓரமாய் ஆகாயத்துப் பறவைகள் சஞ்சரித்து கிளைகள் மேலிருந்து பாடும்" (சங். 104:12)

"என் ராஜாவும் என் தேவனுமாகிய சேனைகளின் கர்த்தாவே, உம்முடைய பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு வீடும், தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்கும் கூடும் கிடைத்ததே" (சங். 84:3)

மேற்கண்ட தேவ வசனங்களை நாம் கருத்துடன் கண்ணோக்குவோமானல் சங்கீதக்காரனுகிய தாவீது இராஜாவும்கூட ஒரு பெரும் பறவை கவனிப்போனுகவே (BIRD WATCHER) இருந்திருப்பதைப்போல் தெரிகின்றது! தேவனுடைய சிருஷ்டிப்பின் மாட்சிமைகளிலெல்லாம் அவர் அளவற்ற ஈடுபாடு கொண்டவர். அவற்றையெல்லாம் உன்னிப்பாகக் கவனித்து, கவனித்து ஆண்டவரை மகிமைப்படுத்தியவர்.

19-ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் நடுத்தர வயதுடைய மனிதன் ஒருவன் நாட்டுப்புறக் கம்பளி ஆடைகளால் தன்னைச் செம்மையாக உடுத்துவித்துக் கொண்டு இருள் சூழப்போகின்ற வானத்தை அமெரிக்காவிலுள்ள விஸ்கான்சின் சமவெளிப் பிரதேசத்திலிருந்து அண்ணுந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய வாய் முணு முணுவென்று தொடர்ச்சியாக ஏதோ ஒன்றை எண்ணிக் கொண்டேயிருந்தது. நீங்களும் நானும் நம்புவதற்கு அரியதான ஒரு எண்ணிக்கையை அவன் தொகையிட்டிருந்தான். நான்கு மணி நேர அவனது எண்ணிக்கையின் இறுதி இலக்கமாக 2,230,272,000 வந்து சேர்ந்திருந்தது. சூரியன் இன்னும் அடிவானத்திற்கு வந்து சேராதேபோயினும் அப்பொழுது இருள் சூழ்ந்திருந்தது. அவன் எதை எண்ணினுன் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? நட்சத்திரங்களையா? இல்லை. இடம் பெயர்ந்து (Migrating) வானவீதியில் அலையலையாய்ச் சென்று கொண்டிருந்த ஒருவித புருக்களைத்தான் அவன் எண்ணியிருந்தான்.

உலகிலுள்ள பல்வேறு விதமான பறவையினங்கள் தங்கள் வசிப்பிடத்தை மாற்றிச் செல்லும் நிகழ்ச்சி (MIGRATION) பெரும், பெரும் பறவையியல் வல்லுநர்களுக்கும் (ORNITHOLOGIST) புரியாத புதிராக இன்றுவரை இருக்கின்றது.

கனடாவிலுள்ள செவ்விந்தியர்கள் வெளி நாடுகளிலிருந்து தங்களண்டை இடம்பெயர்ந்து வரும் பறவைகளின் வருகை, போவதுபற்றிய கால அடிப்படையிலேயே தங்களது காலண்டர் மாதங்களைக் கணக்கிடுவார்களாம். இவ்விதமாக இறகுள்ள பறவைகள் அத்தனை துல்லிபமாக ஒவ்வொரு ஆண்டிலும் சரியான காலத்தில் வந்து, சரியான வேளைகளில் செல்லுகின்றனவாம்:

உலக நாடுகளில் இந்தியாதான் பறவை கவனிப்போர்களின் (BIRD WATCHERS) தனிச் சிறப்பான நாடாகக் கருதப்படுகின்றது. உலகில் வாழும் 30,000 பறவை இனங்களில் 2500 பறவை ஜாதிகள் இந்தியாவில் இங்குமங்குமாகக் காணக்கிடைப்பதாகக் கூறப்படுகின்றது: இந்த எண்ணிக்கை ஆண்டின் ஒவ்வொரு செப்டம்பர் மாதத்திலும் அதிகரித்துவிடுகின்றதாம். காரணம் என்னவெனில் மத்திய ஆசியா, சைபீரியா, தீபெத் பீடபூமி மற்றும்

ஐரோப்பா கண்டத்திலிருந்தும்கூடக் கொடிய குளிர் காலத்திற்கு அஞ்சிப் பறவை இனங்கள் இந்தியாவிற்கு வருகின்றனவாம். இப்படி வரும் பறவைகள் இந்தியாவின் ஏரிகள், குளங்கள், சதுப்பு நிலங்கள், புல்வெளிகளுக்குப் புதிய எழிலைக் கொடுக்கின்றன.

இடப்பெயர்ச்சியில் ஈடுபட்டுள்ளதான நாட்டுப் பறவைகளில் சில இரவு முழுவதும் பறந்துவிட்டுப் பகல் வேளைகளில் ஆகாரம் தேடிக்கொள்ளும் இயல்புடையவைகளாயிருக்கின்றன. அநேகவிதமான நீர்க்கோழிகள், வாத்துக்கள், கிழுவைகள் (TEALS, போன்றவைகள் 15,000 அடி உயரமுதல் 20,000 அடி உயரம் வரைப் பகற்காலங்களில் பறந்து ஆண்டுதோறும் பனிமலைச் சிகரங்கள் நிறைந்த இமயமலையைத் தாண்டிச் செல்லுகின்றன. இவைகளில் சில மணிக்கு 20 மைல் வேகத்திலும், சில 60 மைல்கள் வேகத்தி

லும், தகைவிலான் (SWALLOW) மணிக்கு 68 மைல்கள் வேகத்திலும் பறந்து செல்லுகின்றது.

மேற்கு அலாஸ்காவிலும், வடகிழக்கு சைபீரியாவிலும் முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கும் GOLDEN PLOVER என்ற பறவைதான் உலகிலேயே நீண்ட தூரம் இடையில் இளைப்பாற அமராமல் செல்லக்கூடியவைகளாகும். 2000 மைல்கள் தூரம் ஒரே பறந்தலில் பறந்து அவைகள் இந்தியாவுக்கு வருகின்றன. அதை அடுத்து வரக்கூடியது உள்ளான் இனத்தைச் சேர்ந்த WOODCOCK என்ற பறவையாகும். இது 1500 மைல்கள் ஒரே சமயத்தில் பறந்துவிடக்கூடியது. இந்தப் பறவையின் படத்தையும், நெடுந்தூரம் செல்லக்கூடிய வாத்துக்களின் படத்தையும் நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்.

இடப்பெயர்ச்சியில் நீண்ட நெடுந்தூரமான 8000 மைல்கள் (12,800 KM) வரை பறந்து செல்லக்கூடிய பறவை ARCTIC TERN என்ற பறவை மட்டுமே.

பிராணவாயு பெட்டியின் உதவியின்றி மனிதன்கூடச் செல்ல முடியாத மிக உயரமான இமயமலைகளைத் தாண்டி சில பறவைகள் குறிப்பாகப் பாடும் பறவைகள் இந்தியாவில் வந்து முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்க வருகின்றனவாம். 29,000 அடிகள் உயரத்தில் இமயமலைகளைத் தாண்டிப் பறந்துவரும் வாத்துக்களைப் புகைப்படம் எடுத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இவ்விதமாக உலகின் பல்வேறு தேசங்களிலிருந்து இடம் பெயர்ந்துவரும் குளிர்கால விருந்தாளிகளான பறவைகளின் வருகை மிகவும் துல்லிபமாக இருக்கின்றது. அநேகமாக செப்டம்பர் மாத மத்தியில் பூரணச் சந்திரன் பிரகாசிக்கும் சமயத்தில் வந்து சேர்ந்துவிடுகின்றதாம். இவ்வாறே மார்ச் மாத மத்தியத்தில் பூரண நிலாக் காலத்தில் தங்கள் தங்கள் தேசங்களுக்குப் புறப்பட்டுச் செல்லுகின்றனவாம். இப்படி இடம் பெயர்ந்துவரும் பறவைகள் தங்கள் பயணத்தில் மிகவும் சமர்த்துடையவைகளும், துல்லிபமுடையவைகளு

மிருக்கின்றன. சில பறவையினங்கள் எப்பொழுதும் ஒரே மார்க்கத்திலேயே வந்து செல்லுகின்றதாம்.

பறவைகள் எப்படி ஆயிரக்கணக்கான மைல்கள் எவ்வித ...ர் சாதனமுமின்றி, திசை காட்டும் கருவிகளுமின்றி மாறுபட்ட சீதோஷ்ண நிலைகளில் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குப் பறந்து சென்றுவிட்டு மீண்டுமாகத் தாங்கள் புறப்பட்ட இடத்திற்குப் பத்திரமாக வந்து சேருகின்றன? எங்கும் வியாபித்துக்கிடக்கும் பெருஞ் சமுத்திரங்கள், எல்லையற்ற பாலைவனங்கள், மாறுபட்ட நிலப்பரப்புகளின் மேலாகத் தங்கள் பாதையை அவைகள் எவ்வாறு திட்டமாகக் கண்டுகொள்ளுகின்றன? இவைகள் எல்லாம் மனிதனால் இன்றுவரை விடுவிக்கமுடியாத பெரும் புதிர்களாகவிருக்கின்றன.

சில அறிவியல் வல்லுநர்கள் சூரியனின் நிலைகளையும், வானத்து நட்சத்திரங்களையும் குறிப்பாகத் துருவ நட்சத்திரத்தையும் பறவைகள் தங்களது வழிகாட்டிகளாகக் கொண்டுசெல்லுகின்றன என்று கூறியுள்ளபோதிலும் அதிலும் பெரும் தர்க்கங்களுக்கும், அநேக வினாக்களுக்கும் மேலும் பதிலளிக்கவேண்டிய நிலையுமுள்ளது என்பது தெரிய வருகின்றது. அவைகள் சரியான காலத்தில் இடம் பெயர்ந்து செல்லுவதற்கும் மீண்டும் தக்க சமயம் புறப்பட்டு வருவதற்கும் அதற்கு அறிவைப் போதிப்பவர் யார்? மனிதனின் அற்பமான அறிவைக்கொண்டு மாட்சிமை பொருந்திய மகத்துவ தேவனின் எல்லையற்ற ஞானத்தை அளவிடல் கூடாதகாரியம்!

இப்படிப்பட்டதான ஞானக் கன்மலை பாவியாகிய என்னைத் தமக்காகத் தெரிந்துகொண்டார். தமது ஜீவப்பாதையில் தினமும் என்னை அற்புதமாக வழி நடத்துகின்றார். தமது வருகைக்கும் பரிசுத்தமாக என்னை ஆயத்தப்படுத்துகின்றார்.

துன்பம், துக்கம், பாடுகள், நோவுகள், வறுமை, வியாகுலம் என்னைத் தாக்குகையில் என் உள்ளம் அடிக்கடி நிலைகுலைந்து தடுமாற்றம் கொள்ளுகின்றது. என்னை அழைத்த என் அன்பின் தேவன் என்னை ஆற்றித்தேற்ற என் அருகிலில்லாமல் எங்கே சென்றுவிட்டார் என்று என் உள்ளம் எனக்குள் ஏங்கிக் கதறுகின்றது.

ஆழ்ந்து தேவ சமூகத்தில் ஆராய்ந்து பார்த்தால் உண்மையில் இவையெல்லாம் என் புத்தியீனம் மட்டுமேதான் என்று நான் காண்கின்றேன். தமது அற்பமான சிருஷ்டிகளில் எல்லையற்ற தேவ ஞானத்தை மறைத்து வைத்துள்ள தேவன் தமது சாயலாக உருவாக்கிப் படைத்த எந்தன் வாழ்வில் வந்து சம்பவிக்கும் அனைத்துக் காரியங்களையும் எனது நித்திய நன்மைக்கும், பரலோகத்தினுள் நான் பத்திரமாகச் சென்றடைவதற்கும் மட்டுமே அனுமதித்திருக்கின்றார்.

[மறுபக்கம் பார்க்க]

என் இயேசுவை மாத்திரம் பார்த்துக்கொண்டு-பொன் இயேசுவின் அழகையே சிந்தை செய்து!

"அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில் இயேசுவைத்தவிர வேறொருவரையும் காணவில்லை" (மத். 17:8)

மறுரூப மாட்சிமையைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்ற சீஷர்கள் இறுதி நிலையில் இயேசுவை மாத்திரமே காணக்கூடியவர்களாயிருந்தார்கள். அதைப்போலவே கிறிஸ்தவர்கள் தங்கள் கவனத்தை இதயப்பூர்வமான மனமகிழ்வின் பூரண நிச்சயத்தோடு இரட்சகர் இயேசுவில் மாத்திரம் பிரதானமாசப் பதிக்கவேண்டும். அவர்கள் பிரசங்கிப்போனைப் தொழுது கொள்ளக்கூடாது என்பது மாத்திரமல்ல குளிர்ந்துபோன, அனலற்ற கிறிஸ்தவத்திலும் ஒட்டிப் போய்விடக்கூடாது அநேகக் கிறிஸ்தவர்களுக்கு இயேசு கிறிஸ்துவானவர் ஒரு நிச்சயமற்ற அழகான பிம்பமாக மட்டும்தான் தெரிகின்றார். அப்படித்தான் இயேசு இரட்சகர் இருக்கின்றாரா? அவர் ஜீவிக்கிற மெய் தேவனாக நமது அன்பையும், நமது பக்தியையும் ஆவலாக வாஞ்சித்து எதிர்நோக்கி நிற்கின்றார்.

"அநேகர் இயேசுவைக் குறித்துப் பேசுவதற்கும் அதிகமாக நீதியைக் குறித்தும் இயேசுவின் அடியார்களைக் குறித்தும்தான் பேசுகின்றார்கள். இது ஒரு பெரும் தவறாகும். சுவிசேஷம் என்பது சாரமற்ற வறண்ட போதனைகளாலான வெறும் தொகுப்பு மாத்திரமே என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பதை நாம் விட்டு விட்டு அதில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறவரான வல்லமையுள்ளவரும்; ஜீவனுள்ளவரும் நீ தினமும் அவரது சமூகத்தில் வாழ்கின்றதான உனது ஆப்த நண்பனான இயேசுவை அதில் காணவேண்டும்" என்று J. C. ரைல் என்ற தேவபக்தன் கூறுகின்றார்.

பெர்சிய சாம்ராஜ்யத்தைத் தோற்றுவித்த சைரஸ் என்பவனைப் பற்றி இவ்வாறு கூறப்படுகின்றது. ஒருசமயம் அவன் ஒரு இளவரசனையும் அவனது மனைவி, பிள்ளைகளையும் போரில் சிறைபிடித்துக் கொண்டுவந்தானாம். அவர்களை அந்தப் பேரரசனுக்கு முன்பாகக் கொண்டுவந்து விட்டபோது அவன் அந்த இளவரசனைப் பார்த்து "நான் உன்னை விடுதலை பண்ணினால் நீ எனக்கு என்ன தரு

"........நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய்; இனிமேல் அறிவாய்" (யோவான் 13:7) என்ற என் நல் மீட்பரின் ஒரு வார்த்தை மாத்திரமே எனக்குப் போதுமானது.

அவர் கர்த்தர் அவர் தமது பார்வைக்கு நலமானதை எனக்குச் செய்யட்டும். —

வாய்?" என்று கேட்டானாம். அதற்கு அந்த இளவரசன் மாறுத்தரமாக "எனது ஆஸ்தியில் பாதியை உமக்களிக்கின்றேன்" என்று கூறினானாம்.

"நான் உன்னுடைய பிள்ளைகளை விடுதலை பண்ணினால் நீ எனக்கு என்ன தருவாய்?" என்று அரசன் மீண்டுமாகக் கேட்டானாம்.

"எனக்குள்ள அனைத்தையும் உமக்குக் கையளித்துவிடுகின்றேன்" என்று அவன் பதிலளித்தானாம்.

"நான் உன்னுடைய மனைவியை விட்டுவிடுவதானால் நீ எனக்கு யாது தரப்போகின்றாய்?" என்று அரசன் திரும்பவுமாகக் கேட்டபோது "மேன்மை தங்கிய அரசே, அதற்கீடாக நான் என்னையே உமக்குப் பாத காணிக்கையாக்கி விடுகின்றேன்" என்று அந்த இளவரசன் நன்றிப்பெருக்கோடு கூறினானாம்.

இதைக்கேட்ட சைரஸின் உள்ளம் உருகிற்று. உடன்தானே அவன் அனைவரையும் விடுதலை பண்ணி அனுப்பிவிட்டான்.

இளவரசனும் அவனது மனைவியும், பிள்ளைகளும் வீட்டிற்குத் திரும்பி வந்துகொண்டிருந்தபோது இளவரசன் தனது மனைவியைப் பார்த்து

"சைரஸ் மிகவும் அழகுடையவன் அல்லவா?" என்று கேட்டானாம். கணவன்மேல் மிகவும் ஆழ்ந்த அன்புடைய அந்த இளவரசி அதற்கு மாறுத்தரமாக "அவனுடைய அழகை நான் கவனிக்கவில்லை, எனக்காக மிகவும் மனமகிழ்ச்சியுடன் தன்னையே தத்தம் செய்துவிட்ட உங்களைத்தான் என் கண்கள் சதா நோக்கிக்கொண்டிருந்தன" என்று கூறினாளாம்.

அன்பான விசுவாசியே, உன்னைப் பாவம், மரணம், நித்திய அக்கினியிலிருந்து மீட்கும் பொருட்டாகத் தன்னையே கல்வாரிச் சிலுவையில் மிகுந்த அன்புடன் பிராணத் தியாகம் செய்துவிட்ட உன் அருமை இரட்சகரின் தேவப் பிரசன்னத்தைத் தடைசெய்யும் எந்த ஒரு காரியத்தையும் ஒருக்காலும் உன்னில் அனுமதியாதே.

தேவ எக்காளம்

ஆன்ம ஈடேற்றத்திற்கெனப் பிரசுரமாகும் ஓர் ஆவிக்குரிய மாதாந்திர வெளியீடு. இது எந்த ஒரு சபைப் பிரிவையும் சார்ந்த ஒரு பத்திரிக்கையல்ல. ஆண்டுச் சந்தா ரூ. 5 மட்டுமே.

அனுப்பவேண்டிய முகவரி:-

DEVA EKKALAM,
Kotagiri P. O. - 643 217,
Nilgiris, S. India.

என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன், ஏற்றுக்கொள்ளும், இயேசுவே.

தேவபக்தியுள்ள மிஷனரியும், சிறந்த படிப்பாளியுமான அலெக்ஸாண்டர் டஃப் என்பவர் அநேக ஆண்டுகள் இந்தியாவில் மிஷனரியாகப் பணிபுரிந்தார். கர்த்தருக்குத் தன்னை முற்றுமாக ஒப்புவித்திருந்த அவர் கீழ்க்கண்டவாறு தனது ஒப்புவித்தலை எழுதிவைத்திருக்கின்றார்:–

"புறமதஸ்தரின் இரட்சிப்பைக் குறித்து ஒருகாலத்தில் நான் கவலையும், ஆத்தும பாரமுமற்றவனாக ஜீவித்துக்கொண்டிருந்தேன். காரணம் என்னவெனில், அந்த நாட்களில் நான் எனது சொந்த ஆத்துமாவைக் குறித்தே கவலையின்றி நிர்விசாரமாக ஜீவித்துக் கொண்டிருந்ததுதான். ஆனால் நாட்கள் வந்தன, தேவ கிருபையால் நான் இரட்சிக்கப்பட்டேன். எனது ஆத்துமத்தின் நித்திய விலைமதிப்பைக் கவலையோடும், கண்ணீரோடும் நான் உணர்ந்தேன். அதைத் தொடர்ந்து பாவத்தில் மாளும் மாந்தரைக் குறித்த கவலை என்னை வெகுவாக அழுத்தினது. என்னுடைய அந்தரங்கத்தில் நான் ஆண்டவரை நோக்கி "ஆண்டவரே, வெள்ளியும், பொன்னும் என்னிடத்திலில்லை. எனக்குள்ளது எதுவோ அதையே தேவரீர்க்கு அளிக்கின்றேன். என்னையே முற்றுமாகத் தமக்கு அர்ப்பணம் செய்கின்றேன். இந்த எனது காணிக்கையை நீர் அங்கீகரிக்கமாட்டீரோ?"

அலெக்ஸாண்டர் டஃப் 10 வயதினனாக இருந்தபோது ஒரு சமயம் ஆலயத்திற்குச் சென்றிருந்தார். ஆலயத்தின் ஆசனத்தில் உட்கார்ந்திருந்தபோதே அவருடைய இருதயம் விசேஷித்தபிரகாரம் தேவ ஆவியானவரால் அனலூட்டப்பட்டுக் கொண்டிருந்தது. சபையினரிடம் காணிக்கை சேகரிப்போர் ஆலயத்தின் பின்வரிசையிலிருந்து காணிக்கைத் தட்டில் காணிக்கைகளைச் சேகரம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். திடீரென டஃப் தனது இருக்கையிலிருந்து எழுந்து ஆலயத்தின் பின்வரிசைக்கு ஓடிச்சென்றார். காணிக்கை வாங்கும் ஒருவரண்டை வந்துநின்று அவரது முகத்தையே முற்றுமாக அப்படியே நோக்கிக் கொண்டே "ஐயா, உங்கள் கரத்திலுள்ள காணிக்கைத் தட்டை நன்றாகத் தாழ்த்திப் பிடித்துக்கொள்ள மாட்டீர்களா?" என்று கேட்டார். சிறுவனின் அன்பின் வேண்டுகோளுக்கு அந்த மனிதன் அப்படியே கீழ்ப்படிந்தார். தன்னை முற்றுமாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தலின் அடையாளமாக டஃப் அந்தக் காணிக்கைத் தட்டில் ஏறிநின்று "ஓ அன்பின் கர்த்தரே, நான் என்னையே காணிக்கையாகத் தமக்களிக்கின்றேன் ஐயா" என்று கூறினாராம்.

ஆனி கட்லர் என்ற இங்கிலாந்து தேசத்தின் லங்காஷையர் நகரத்திலுள்ள பெண்மணி உல்லியம் பிராம்வெல் என்ற தேவபக்தரது ஆரம்பகால ஊழியத்தின் பலனாகக் குணப்பட்டு அழியும் ஆத்துமாக்களுக்காகக் கர்ப்பவேதனைப் படக்கூடியதான மன்றாட்டின் ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தார்கள். அம்மையார் தன்னை ஊக்கமான ஜெபத்திற்கும், உபவாசத்திற்கும் ஒப்புவித்திருந்தார்கள். தன்னுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை ஆண்டவர் சமூகத்தில் பிரதிஷ்டையின் உடன்படிக்கை பண்ணி ஜீவித்து வந்தார்கள். ஆனி கட்லர் அம்மையார் அநேக ஆண்டுகளுக்கு முன்னர் ஆண்டவர் சமூகத்தில் எழுதினதான ஒப்புவித்தலின் உடன்படிக்கை வார்த்தைகள் இவ்வாறுள்ளன:-

"ஆசீர்வதிக்கப்பட்ட பரம பிதாவே, அன்பின் இயேசுவே, பரிசுத்த ஆவியானவரே! என்னுடைய சரீரத்தையும், ஆத்துமாவையும் தம்முடைய கரங்களுக்கே ஆதீனமாக்குகின்றேன். தம்முடைய பரிபூரண சித்தம் என்னில் செய்யப்படட்டும். தமது பரிசுத்த நாம மகிமைக்காக என்னைப் பிரயோகியும். எந்தச் சூழலிலும் தமது ஆவியை நான் துக்கப்படுத்தாதிருக்க எனக்குக் கிருபை தாரும். ஒவ்வொரு க்ஷணப் பொழுதும் நான் உம்முடையவளாயிருப்பேனாக. அதைப்போலவே நீரும் என்னுடைய அருமை நேசராயிரும். நாம் முழுமையாக ஒன்றாக இணைந்துவிட்டோம். நாம் ஒருவர் மாத்திரமே. இந்த இணைப்பும் ஒருமைப்பாடும் எக்காலத்துக்கும், யுகா யுகங்களுக்கும் கட்டுக்குலையாமல் ஒரே நிலையில் நிலைத்திருக்க நான் மன்றாடி ஜெபிக்கின்றேன். நான் மீண்டுமாக என்னை உமக்கு அர்ப்பணம் செய்கின்றேன். நீரும் திரும்பவுமாகத் தம்மை எனக்களித்துவிடும்".

வாசிப்போனே, நீ உன்னை இவ்விதமாக ஆண்டவருக்கு இன்றே அர்ப்பணம் செய்யமாட்டாயா?

என் அருமைப் பிள்ளையே
பாடுகளின் பயிற்சிப்பள்ளி உனக்கு அவசியம்!

ஒரு மாபெரும் எஃகு (STEEL) தொழிற்சாலையின் சோதனைக் கூடத்தில் ஒருசமயம் நான் நின்று பார்த்துக்கொண்டிருந்தேன். என்னைச் சுற்றிலும் அநேக சின்னச் சின்ன அறைகளிருந்தன. ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு எஃகு கம்பி வைக்கப்பட்டிருந்தது. அக்கம்பிகள் ஒவ்வொன்றும் பரீட்சிக்கப்பட்டு அதின் உடையும் நிலை எந்த அழுத்தத்தில் ஏற்படும் என்ற விபரணங்கள் அக்கம்பிகளில் எழுதப்பட்டிருந்தன. சில கம்பிகள் ஒடியும் வரை நன்கு முறுக்கப்பட்டு, அதின் உச்சகட்ட முறுக்கிய நிலையின் வலு எவ்வளவு என்பது வரையப்பட்டிருந்தது. சில கம்பிகள் நெடும் போக்காய் நீட்டப்பட்டு அவற்றில் எவ்வளவு பளுநிலை ஏற்றினால் ஒடிந்து

போகும் என்ற விபரங்கள் தீட்டப்பட்டிருந்தன. இன்னும் சில கம்பிகள் சிதைந்துபோகத்தக்கதான அளவை அடைய அவற்றின்மேல் எவ்வளவு அழுத்தநிலை இடுதல் வேண்டும் என்ற புள்ளி விபரங்கள் குறிக்கப்பட்டிருந்தன.

அந்தத் தொழிற்சாலை அதிபருக்கு இந்தக் கம்பிகள் ஒவ்வொன்றின் தார தம்மியங்களும், வலுமை அளவுகளும் நன்கு தெரியும். இக்கம்பிகள் ஒவ்வொன்றும் எந்தெந்த காரியங்களுக்கு உதவும் என்பதை அவர் நன்கறிவார். ஒரு மாபெரும் கப்பலிலோ, அல்லது கட்டடத்திலோ, அல்லது பளுமிக்கப் பாலம் ஒன்றிலோ எங்கே இவை பயன் அளிக்கும் என்பதை அவர் திட்டமாக அறிவார். காரணம், அவரது சோதனைக்கூடம் அதை அவருக்கு எடுத்தியம்புகின்றது.

தேவனுடைய பிள்ளைகளின் காரியங்களும் அடிக்கடி இதைப் போலவேதான் உள்ளன. சோதனையின் வெறும் தொடுதலிலேயே விழுந்து நொறுங்கிப்போகும் கண்ணாடி அல்லது பீங்கான் மலர் ஜாடிகளைப்போன்று நாம் இருக்கத் தேவன் ஒருக்காலும் நம்மை விரும்புவதில்லை. வளைதலையும், முறுக்குதலையும், சிதைத்தலையும், அழுத்துதலையும் கடைசிமட்டும் தாங்கி உடையாமல் நிலைத்து நிற்கும் எஃகு துண்டுகளாக நாம் இருக்கத் தேவன் நம்மை எதிர் நோக்குகின்றார். கண்ணாடி வீட்டில் வைத்துப் பாதுகாக்கப்படும் இளம் செடிகளைப் போலல்லாது புயலுக்கும் அசையாத சிந்தூர மரங்களாகவும் (Oak Trees) காற்றடிக்கும் போதெல்லாம் தன் போக்கை மாற்றிக்கொண்டிருக்கும் மணல் திட்டுகளாக இல்லாமல் கோரப் புயலையும் பகடி செய்யும் உறுதியான கன்மலைகளாக நாம் காணப்படத் தேவன் நம்மைப் பெரிதும் விரும்புகின்றார். இப்படிப்பட்டவர்களாக நம்மைச் செய்ய தேவன் தமது உபத்திரவத்தின் சோதனைக் கூடத்திற்கு நம்மைக் கொண்டு செல்வது தவிர்க்க முடியாத அவசியமாகின்றது.

நாம் எந்தெந்த இடத்திற்குத் தகுதியானவர்கள் என்பதைத் தேவனுடைய சோதனைக்கூடம் ரூபகாரப்படுத்திக் காண்பிக்கின்றது.

நம்முடைய சொந்த இரட்சகரான கர்த்தராகிய இயேசுவைக் குறித்து ஆவியானவர் தாமே கீழ்க்கண்டவாறு திருவுளம் பற்றியுள்ளார்:–

“ஆதலால், அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்” (எபிரேயர் 2:18)

இயேசுகிறிஸ்து தாமே இவ்விதமான பாடுகளின் பள்ளிக்கூடம் சென்று பயிற்சி பெற்றிருப்பாரானால் தேவனின் பலவீனமான குழந்தைகளாகிய நாம் எத்தனை அதிகமாகப் பள்ளி ஆசானாகிய இயேசுவிடம் பாடங்களைக் கற்றுக்கொள்ளுதல் அவசியமானது.

பாடுகளின்றிப் பரலோகம் இல்லை. தேவனுடைய கிருபைக் கரங்களால் நீ உபயோகப்படுத்தப்பட வேண்டுமானால் அவரது பாடுகளின் பயிற்சி சாலைக்குச் சென்று முதலாவது பட்டம் பெறுதல் தீராத அவசியமாகும்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னைவிட பெலசாலிகளும், வயதில் குறைந்தவர்களும், நோய் நொடியற்றவர்களும்கூட மரித்து மறுமைக்குள் பிரவேசித்திருக்க நான் மாத்திரம் இன்று ஜீவனோடு இவ்வுலகிலிருக்கின்றேன். என் நாசியில் சுவாசம் செம்மையாக உள்ளும் புறமும் சென்று கொண்டிருக்கின்றது. எனது கண்கள் துடிப்பாய்ப் பார்க்கின்றன. என் வாய் அகலத் திறந்து பேசுகின்றது. என் கால்களும், கரங்களும் உறுதியாகவிருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த மட்டற்ற தேவ அன்பின் பெருக்கிற்குக் கைம்மாறு யாது செய்வதென்றறியாது என் உள்ளம் தடுமாற்றம் கொள்ளுகின்றது. நான் நியாயமானபடி மரித்திருக்கும் பட்சத்தில் இன்று என் எலும்புகள் முதலாய் மண்ணில் காணக் கிடைக்காதபடி பூமி என்னைப் பட்சித்திருக்க வேண்டியதாயிருந்தது. ஆனாலும், நான் இந்த க்ஷணம் உயிரோடிருக்கின்றேன். எனினும் எனக்களிக்கப்பட்டுள்ள இந்தப் பரம சிலாக்கியம் என்றும் என்னைத் தொடர்ந்து கொண்டிருக்கும் என்று நான் வீணே கனவுலகிலிருந்துவிட முடியாது.

ஒருநாள் வரும். அது வாரத்தின் எந்தநாள் என்று எனக்குத் தெரியாது. வாரத்தின் அந்த நாளை என் ஜீவியத்தின் கடந்த நாட்களில் மனமகிழ்ச்சியோடும் ஆனந்தத்தோடும் நான் செலவிட்டதுண்டு. ஆனால், அது இன்று எனக்கு மரணநாள் உலகம் அதின் பாதையில் அன்று சென்றுகொண்டிருக்கும். பட்டணங்களிலும், கிராமங்களிலும் மாந்தர் தத்தம் அலுவல்களைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துச் செய்துகொண்டிருப்பர். சாலைகளில் போக்குவரத்து வழக்கம்போல மும்முரமாக நடந்துகொண்டிருக்கும். குழந்தைகள் தெருக்களில் ஓடி விளையாடி மகிழ்ந்துகொண்டிருப்பர். பறவைகள் மரக்கிளைகளில் உட்கார்ந்து கீச்சிட்டுக் குரல் எழுப்பிப் பாடிக்கொண்டிருக்கும். ஆனால் நான் மட்டும் மரணத்தின் குளிர்ந்த அரவணைப்பில் கட்டுண்டு கிடப்பேன். காடும், மேடும் அலைந்து திரிந்த என் உறுதியான கால்கள் கருமை படர்ந்து சில்லெனக் கட்டிலில் கிடக்கும். உழைத்து, உழைத்து உருக்குலைந்த என் கரங்கள் செயலிழந்து அப்படியே ஜீவனற்றுக் கிடக்கும். நாள் முழுவதும் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டிருந்த என் கண்கள் இனி ஒருக்காலும் உலகினைப் பார்க்காதபடி நித்தியமாக மூடிக்கொண்டிருக்கும்.

ஆம், நான் மரித்துவிட்டேன். என் ஜீவன் என் சரீரத்திலிருந்து விடைபெற்றுச் சென்றுவிட்டது. சாது சுந்தர்சிங் தம்முடைய புத்தகம் ஒன்றில் குறிப்பிடுவதைப் போன்று நஷ்டப்பட்ட என் ஆத்துமா முடிவில்லா நித்தியத்தின் இருளுக்குள் கடந்துசெல்லும். அங்கு சென்ற நான் திகைப்பேன். அங்கலாய்ப்பேன். இறுதியாக நான் எங்குவந்து சேர்ந்திருக்கின்றேன் என்று என்னில் நானே பிரமை கொண்டு இங்குமங்கும் திரு திருவென்று விழித்துக் கொண்டிருக்கும் வேளைதனில் சில கரிய ஆவிகள் என்னண்டை வந்து "நீ இப்பொழுது பூவுலகத்திலில்லை. நீ மரித்துவிட்டாய். முடிவற்ற யுகா யுகங்களாக வேதனை அடையப்போகும் நரகத் தீயின் பயணப் பாதையிலிருக்கின்றாய்" என்று என்னை நினைப்பூட்டும். ஆ, எத்தனை பயங்கரம்!

இவ்விதமான மா பயங்கரமான ஒரு அழிவின் நிலையை நான் எனக்கு வருவித்துக் கொள்ள நான் என்ன அவ்வளவு மதியீனனா? என் சாவாமையுள்ள ஆத்துமாவை நான் ஒருக்காலும் நஷ்டப்படுத்தமாட்டேன். எனக்காக நீசச் சிலுவையில் மூன்றாணிகளில் தொங்கி இரத்தம் சிந்தி மாண்ட என் நேச கன்மலையண்டை இன்றே நான் ஓடிச்சென்று அவர் பரிசுத்த பாதங்களில் விழுந்து என் பாவங்கள் யாவற்றையும் அவர் சமூகத்தில் அழுது அறிக்கையிட்டு பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பின் சந்தோஷத்தையும் நான் பெற்றுக்கொள்ளுவேன். "என்னிடத்தில் வருகிறவனை நான் ஒருக்காலும் புறம்பே தள்ளுவதில்லை" என்ற என் அருமை இரட்சகர் என் பாவங்களைப் பாராதபடிக்குத் தமது முகத்தை மறைத்து என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கித் தமது பிள்ளையாக என்னை ஏற்றுக்கொண்டு தமது நித்தியானந்த மகிமைகளுக்கு என்னைச் சுதந்திரவாளியாக்குவார். ஆமென்.

FORM IV

DEVA EKKALAM

Place	:	Kotagiri, Nilgiris.
Periodicity	:	Monthly.
Printer	:	Prof. D. S. SPURGEON (Indian) Thoothan Press, Newport Street, Nagercoil 629 001, K K. Dist.
Editor	:	N. SAMUEL
Publisher & Owner	:	Kotagiri 643 217, Nilgiris.

I, N. SAMUEL, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

25-3-1981. Sd/- N. SAMUEL.